Chenkaantal
A Bi-Yearly Peer-Reviewed Tamil Journal

Volume - 2, Special Issue - 1, November 2022 E-ISSN: 2583-0481

# A Feminist Psychology of *Arugan* by Tamilachi Thangapandian

**N. Ajith Kumar**, Ph.D. Research Scholar, Department of Modern Literature,
School of Tamil Studies, Madurai Kamaraj University, Madurai – 21, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0003-0184-833X**
**Prof. V. Ramarajapandian,** Chairperson, School of Tamil Studies,
Madurai Kamaraj University, Madurai – 21, Tamil Nadu, India.
**ORCiD: https://orcid.org/0000-0002-3382-5223**
**DOI: 10.5281/zenodo.7312401**

## Abstract

*Psychiatry is the medical treatment of depression. In the early period, psychological ideas were based on human behavior. Sigmund Freud was the person who made it scientific. In his psychoanalysis, the human mind operates on three levels. All human emotions are controlled by these three bases, called id, ego, and superego. Id is called "Desiring Mind." The ego is the site of self-creation. The superego is the disciplined mind. Feelings that cannot be expressed directly due to culture and control become stagnant in the unconscious. These manifest as dreams to fulfil the wishes. Freud says literary works are also part of the wish fulfilment of consciousness. So, they can also be considered as dreams. Women have an abundance of emotions that cannot be expressed due to social constraints. In the background of the emergence of feminism, women's rights and thoughts against patriarchal society also emerge. Women are expressing patriarchy in their works as symbols and images. These are evident in the works of today's writers. Tamilachi Thanga Pandian, who excels in modern poetry in Tamil, expresses the patriarchal systems as symbols and images. In her poems, the act of nose-cutting reveals the misogyny of patriarchy, the attitude of denying sexual purity, and the violence faced by women in the family system. This article explores Tamilachi Thangapandiyan's poems through feminist psychoanalysis.*

**Keywords:** Psycho-analysis, Tamilachi Thangapandian, *Arugan*, Sigmund Fraud, Feminism.

## References

[1] Kanchana. R. *Feminian Psychology and Women Writings*, Sellappa Publication, Thanappa muthali Theru, Madurai – 2004.
[2] Ravichandran. T. K. Epics Psychoanalysis, Pirazh Veliyeedu, Madurai, 2019.
[3] Ravichandran. T. K. *Sigmund Freud's Science of Psycho Analysis*. Alaikal Veliyeedu, Kodambakkam, Chennai, 2011.
[4] Sarathambal. S. *Comparative theories and other disciplines*. Meenakshi Book House, Thanappa muthali Theru, Madurai – 2021.
[5] Sarathambal. S, *Literature and Psychoanalysis*, Hariharan Publication, Madurai, 2021.
[6] Thamizhachi Thangapadian, *Arugan*. Uyirmai Publication, Chennai – 2011.

**Author Contribution Statement:** NIL.
**Author Acknowledgement:** NIL.
**Author Declaration:** I declare that there is no competing interest in the content and authorship of this scholarly work.

The content of the article is licensed under https://creativecommons.org/licenses/by/4.0/ International License.

# தமிழச்சி தங்கபாண்டியனின் *அருகன்*: பெண்ணிய உளப்பகுப்பு

**ந. அஜித் குமார்**, முனைவர் பட்ட ஆய்வாளர், இக்கால இலக்கியத்துறை,
தமிழியற்புலம், மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 21, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0003-0184-833X**
**பேரா. வை. இராமராஜபாண்டியன்**, புலத்தலைவர், தமிழியற்புலம்,
மதுரை காமராசர் பல்கலைக்கழகம், மதுரை – 21, தமிழ்நாடு, இந்தியா.
**ORCiD: https://orcid.org/0000-0002-3382-5223**
**DOI: 10.5281/zenodo.7312401**

**ஆய்வுச் சுருக்கம்**

*உளவியல் என்பது மனஅலசல் என்னும் மருத்துவ முறையாகும். தொடக்க காலத்தில் உளவியல் சார்ந்த சிந்தனைகள் மனித நடத்தைகளை அடிப்படையாகக்கொண்டு தோற்றம் பெற்றன. அதனை அறிவியல் முறைப்படுத்தியவர் சிக்மண்ட் ப்ராய்ட் ஆவார். அவரது உளப்பகுப்பாய்வில் மனிதர்களின் மனமானது மூன்று தளங்களைக் கொண்டு இயங்குவதாக அமைகிறது. இட், ஈகோ, சூப்பர் ஈகோ எனப்படும் இத்தளங்களில் மனித உணர்வுகள் அனைத்தும் கட்டுப்படுத்தப்படுகின்றன. இத் என்பது விழைவு மனம் எனப்படுகிறது. ஈகோ என்பது தன்னிலையை உருவாக்கும் தளமாகும். சூப்பர் ஈகோ என்பது நெறி மனம் ஆகும். பண்பாடு, கட்டுப்பாடு ஆகியனவற்றால் நேரடியாக வெளிப்படுத்த முடியாத உணர்வுகள் நனவிலியில் தேக்கமடைகின்றன. இவை கனவுகளாக வெளிப்பட்டு விருப்ப நிறைவேற்றம் அடைகின்றன. இலக்கியப் படைப்புகளும் நனவிலியின் விருப்ப நிறைவேற்றத்தின் ஒரு பகுதியாகும் என்கிறார் ப்ராய்ட். எனவே அவையும் கனவுகளாகக் கருதத்தக்கவை எனலாம். சமூக நிர்பந்தங்களால் வெளிப்படுத்த முடியாத உணர்வுகளை பெண்களே மிகுதியாகக் கொண்டுள்ளனர். பெண்ணியம் தோன்றிய பின்னணியில் பெண்களின் உரிமைகளோடு ஆணாதிக்கச் சமூகத்திற்கு எதிரான சிந்தனைகளும் வெளிப்படுகின்றன. ஆணாதிக்கத்தினை பெண்கள் தம் படைப்புகளில் குறியீடுகளாகவும் படிமங்களாகவும் வெளிப்படுத்தி வருகின்றனர். இன்றைய எழுத்தாளர்களின் படைப்புகளில் இவை வெளிப்படுகின்றன. தமிழில் நவீனக் கவிதைகளில் சிறந்து விளங்கி வரும் தமிழச்சி தங்க பாண்டியனின் கவிதைகளில் ஆணாதிக்க முறைமைகளை குறியீடுகளாகவும் படிமங்களாகவும் வெளிப்படுத்துகின்றார். மூக்கறுத்தல் என்னும் செயல்பாடு ஆணாதிக்கத்தின் பெண் வெறுப்பினையும் பாலியல் துய்ப்பினை மறுக்கும் மனநிலையையும் வெளிப்படுத்துவதையும் குடும்ப அமைப்பில் பெண் சந்திக்கும் வன்முறைகளையும் கவிதைகளில் வெளிப்படுத்துகிறார். இக்கட்டுரை தமிழச்சி தங்கபாண்டியனின் கவிதைகளை பெண்ணிய உளப்பகுப்பாய்வு நோக்கில் இவற்றை வெளிப்படுத்துகிறது.*

**குறிப்புச் சொற்கள்:** உளப்பகுப்பாய்வு, தமிழச்சி தங்கபாண்டியன், *அருகன்*, சிக்மண்ட் பிராய்ட், பெண்ணியம்.

**முன்னுரை**

மனிதர்கள் இயல்பாக இருப்பதைப் போல கருதப்படும் பல்வேறு செயல்களின் பின்னணியில் பல்வேறு உளவியல் காரணங்கள் இருக்கின்றன. மனிதர்கள் அனைவரும் உளவியல் நோய் பீடித்தவர்களே என்பது உளவியலாளர்களின் கருதுகோளாகும். முழுமையாக உளநோய் அற்றவர்கள் என யாருமில்லை. ஒவ்வொருவரது செயல்களும் நனவிலியின் உந்தங்களால் நிகழ்கின்றன. அவ்வுந்தங்கள் பாலியல் விழைவை அடிப்படையாகக் கொண்டவை. பாலியல் நடத்தைகள் வெளிப்படையாக அமைவதில்லை. எனவேதான் அவை அமுக்கம் பெறுகின்றன. சிறு வயதிலிருந்து அமுக்கத்திற்கு உள்ளாகும் விழைவுகள் வேறு வடிவங்களில் வெளிப்படுகின்றன. இதில் பெண்ணின் மீது கூடுதலான அழுத்தங்கள் சமூகத்தால் விதிக்கப்படுகின்றன. எனவே பெண்களின் செயல்பாடுகளில் அனைத்திலும் அமுக்கத்தினால் உந்தப்பட்ட தன்மை காணப்படும். இலக்கிய படைப்புகளிலும் நனவிலியில் அமுக்கப்பட்ட விழைச்சு வெளிப்படும். அதனால்தான் கனவினை படைப்புக்கு ஒப்பிட்டுக் கூறினார் ப்ராய்ட். பகல் கனவும் இரவுக் கனவும் நனவு மனம் ஆதிக்கம் செய்யாத வகையில் நிகழும் விருப்ப நிறைவேற்றம் ஆகும். படைப்பு என்பது நனவு மனம் ஆதிக்கம் செய்யும் விருப்ப நிறைவேற்றம் ஆகும். விழைவு மனம் எனப்படும் இத் என்பது தான் விரும்பியதை வெளிப்படுத்த சமூக, பண்பாட்டு விதிகள் அனுமதிக்க மறுக்கும் போது நனவிலியில் தங்குகிறது. அது நிறைவேறாத ஏக்கமாக பதிவு பெறுகிறது. அத்தகையவை படைப்புகளில் வெளிப்படுகின்றன. அதிலும் பெண் படைப்புகளில் ஆணாதிக்க ஒடுக்குமுறைகளுக்கு எதிரான பல்வேறு அமுக்கப்பட்ட சிந்தனைகளைக் காணமுடியும். பெண் படைப்பாளியின் இலக்கியத்தை உளப்பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் போது நனவிலியின் ஏக்கங்கள் பதிவு பெற்றிருப்பதைக் காணலாம். அந்த அடிப்படையில் தமிழச்சி தங்க பாண்டியனின் அருகன் என்னும் கவிதைத் தொகுப்பினை பெண்ணிய உளப்பகுப்பாய்வுக்கு உட்படுத்தும் போது அவரது மனதின் உள் மடிப்புகளில் உறங்கிக் கிடந்த பல்வேறு செய்திகள் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. அதில் சமூகம் நிர்ணயித்திருக்கும் பல்வேறு ஒழுங்குகளைக் களைத்துப் போடும் மன விருப்பம் வெளிப்படுகின்றன. சிறுமியாகவே உறைந்து விட வேண்டும் என்ற எண்ணம் அவருள் எப்பொழுதும் இருக்கிறது. பெண்ணுக்கு சமூகத்தின் அழுத்தம் மிகுதியாக இருப்பதை அவரது கவிதைகள் உட்கொண்டுள்ளன.

**உளப்பகுப்பு**

உள்ளம் என்பது மனித நடத்தையை தீர்மானிக்கும் கருவியாகும். மனித நடத்தையை ஆராயும் அறிவியலே உளவியல் என்று குறிப்பிடுவர். உள்ளத்தில் எழும் உணர்வுகள் அனைத்தும் வடிகாலாக வெளிப்படுகின்றன. அவை மனித நடத்தையைத்தீர்மானிக்கின்றன.

சமூக நியதிகள் மனித உணர்வுகளை ஒழுங்குபடுத்துகின்றன. உளப்பகுப்பு என்பது மனிதனின் உளநோய்க் கூறுகளை கண்டறியும்பொருட்டு நடத்தையைப் பகுத்தாய்தலாகும்.

> **உளவியல் மனிதனின் நடத்தயைக் கூர்ந்து நோக்கிப் பரிசோதனை போன்ற அறிவியல் முறைகளைப் பின்பற்றி மனிதனின் நடத்தைக்கான அடிப்படை விதிகளை எடுத்துரைக்கிறது. இவ்வாறு ஆராய்வதால் அணுகுமுறையில் உளவியல் அறிவியலுடன் தொடர்புடையது. ஆனால் உளவியலின் உயிர்மூச்சு மனமே ஆகும். இலக்கியம் மனித மனங்களையே மையமாகக் கொண்டுள்ளது. எனவே உளவியல் கலை இலக்கியத்துடனும் தொடர்புடையது. உளவியலின் பின்னணியில் செய்யப்படும் உளப்பகுப்புத் திறனாய்வும் அறிவியல் திறனாய்வின் வழிப்பட்டது என்று கருதவும் இடமுண்டு (செ.சாரதாம்பாள், 4:2044)**

என்ற கூற்றில் உளப்பகுப்பாய்வு என்பது மனித நடத்தையைப் பற்றிய உளச் செயல்பாடுகளை கண்டறிதல் என்பதை அறிந்துகொள்ளமுடிகிறது. மனிதர்களின் நனவு மனமானது புறச் செயல்பாடுகளில் ஈடுபடக் கூடியதாகும். நனவிலி என்பது அகச் செயல்பாடுகளை கட்டுப்படுத்துவதாகும். மனதின் மூன்று அடுக்குகள் இத், ஈகோ, சூப்பர் ஈகோ என்று அழைக்கப்படும். இத் என்பது நனவடங்கு மனத்தின் லிபிடோ தேக்கியாகும். லிபிடோ என்பது பாலியல் உந்தம் என்று பொருள்படுகிறது. தி.கு.இரவிச்சந்திரன்,

> **உளச்செயலிகளில் முதன்மையான இட் (id) நனவிலிக்குள் மட்டும் அமைந்திருக்கின்றது. உள்ளம் பிளவுப்பட்டப் பிறகு இந்த இட் நனவிலிக்குள் பொதிந்து விடுகின்றன. முதல் தளவரையில் வேட்கைகள் (desires), கருத்துக்கள் (ideas) என்று சொல்லப்பட்ட உளக் கூறுகளின் தொகுதியைத்தான் இட் என்கிறார் ப்ராய்ட் (தி.கு.இரவிச்சந்திரன், 250:2011)**

என்று இட் என்னும் முதல் தளவரைவின் இயக்கம் பற்றிக் குறிப்பிடுகிறார். இதுபோல் மனதின் அடுத்தடுத்த தளவரைவுகள் ஈகோ, சூப்பர் ஈகோ என்பனவாகும். இச்செயலிகளின் நோக்கமும் உள்ளத்தின் செயல்களைக் கட்டுப்படுத்துதல் ஆகும்.

> **நனவு மனத்தின் புலனறிவுகளாகவும் நனவிலி மனத்தில் அமுக்கப்பட்ட எண்ணங்களாகவும் ஈகோ கூறுகள் விளங்குகின்றன. நனவு மனத்தைக் காட்டிலும் நனவடங்கு மனத்தில் அதிகமான இடத்தை ஈகோ பெறுகிறது. நனவிலியில் குறைந்த அளவில் ஈகோ இருந்தாலும் வலிமை மிக்கதாக உள்ளது. சூப்பர் ஈகோ என்பது ஈகோவின் ஒரு பகுதியாகும். எனவே ஈகோ எங்கெல்லாம் உள்ளதோ அங்கெல்லாம் சூப்பர் ஈகோவும் இருக்கும். நனவடங்கு மனத்தில் இதன் பரப்பு அதிகமாகவும் நனவிலி மனத்தில் குறைவாகவும் இருக்கும். இட், ஈகோ, சூப்பர் ஈகோ ஆகிய மூன்றும் ஊடாடிச் செயல்படுவதையே உள இயக்கங்கள் என்பர் (மேலது, 251)**

என்று மனதின் மூன்று நிலைகளைப் பற்றிக் கூறுகிறார். இதில் நனவிலி மனதின் ஒரு பகுதியாக விளங்கும் இட் என்பதே விழைவுகள் தேங்கும் இடமாகும்.

**பெண்ணிய உளப்பகுப்பாய்வு**

நவீனச் சிந்தனைகளில் ஒன்றாக முகிழ்த்தது பெண்ணியமாகும். பெண்களின் தன்னுரிமைப் போராட்டங்களை முன்னெடுத்த சிந்தனைகள் பெண்ணியச் சிந்தனைகள் ஆகும். தொடக்கத்தில் வாக்குரிமை என்பதே முதன்மையாக இருந்தது. பின்னர் தொழிற்சாலைகளில் வேலை பார்க்கும் பெண்கள் சமத்துவ உரிமைக்காகப் போராடினர். பின்னர் குடும்ப அமைப்பே பெண்ணின் ஒடுக்குமுறைக்கு அடிப்படையாக அமைகின்றன என்று குடும்பத்தை வெறுத்தனர். திருமணம், பாலுறவு, குழந்தை பிறப்பு போன்றவற்றையும் ஒதுக்கினர். தற்பால் சுதந்திரம், திருமணமின்றி வாழ்தல் போன்றவற்றையும் முன்னெடுத்தனர். பெண்ணின் தன்னிலையானது யாவராலும் போற்றப்படும் வகையில் உயர்வினை எய்த வேண்டும் என்ற மனப்போக்கினை உடையதாக பெண்ணியச் சிந்தனைகள் ஆணாதிக்க, முதலாளிய நலன்களுக்கு எதிராக பெண்களின் வாழ்வைப் பேசின.

> **சமூகத்திலும் வேலைத் தளத்திலும் குடும்பத்திலும் நிலவும் பெண் ஒடுக்குமுறை மற்றும் சுரண்டல் பற்றிய பெண்களின் உணர்வு நிலைகளும் இந்நிலை மாறுவதற்குப் பெண்களும் ஆண்களும் எடுக்கும் உணர்வுப் பூர்வமான நடவடிக்கைகளும் பெண்ணியத்தின் பரந்துபட்ட வரையறையாக இப்போதைய நிலையில் கொள்ளலாம் (இரா.காஞ்சனா, 15, 2013)**

என்று பெண்ணியத்திற்கு விளக்கம் தரப்படுகிறது. ஒடுக்குமுறைகளிலிருந்து விடுபடுதல் நோக்கங்களில் ஒன்றாகக் காணப்படுகிறது. பெண் படைப்புகளை உளப்பகுப்பாய்வு நோக்கில் அணுகுவதே பெண்ணிய உளப்பகுப்பாய்வாகும். “பெண்ணுக்கும் ஆணுக்குமான சமூகக் கற்பிதங்கள் ஆண் நோக்குடையதாகவே இருப்பதனால் ஆணின் நனவிலியைக் காட்டிலும் பெண்ணின் நனவிலி அமுக்கப்பட்டதாகவே காணப்படுகிறது. இந்நிலையில் பெண்ணின் ஆழ்மன உணர்வுகளை வெளிப்படுத்தும் பெண்ணின் பேச்சுக்களையும் மொழிக்கூறுகளையும் பகுத்தாய்ந்து பெண்ணின் அனுபவங்களை வெளிக்கொணர்வது பெண்ணிய உளப்பகுப்பாய்வாகும்” (செ.சாரதாம்பாள், 325: 2021) என்ற கூற்றில் வெளிப்படுத்தப்படுகிறது. பெண்ணின் தன்னிலையானது ஆணாதிக்கச் சமூகத்தால் கண்காணிக்கப்படுவதாகவும், ஒடுக்கப் படுவதாகவும் காணப்படுகிறது. எனவே அமுக்கப்பட்ட உணர்வுகள் மிகுதியாக இருப்பதற்கு வாய்ப்புகள் மிகுதியாகும். பெண்ணின் பாலியல் உணர்வுகள் மட்டுப்படுத்தப்பட்டதாகக் காணப்படுகிறது. பெண்ணின் உணர்வெழுச்சிகள் கனவுகளாகவும், படைப்புகளாகவும் வெளிப்பட்டு விருப்ப நிறைவேற்றம் அடைகின்றன.

**படைப்பும் கனவும்**

படைப்பு உணர்வுகளின் வடிகால் எனில் அது மிகையன்று. மனிதர்கள் தாம் எண்ணுபவற்றையெல்லாம் வெளிப்படுத்த முடிவதில்லை. சிறுகுழந்தையானது சமூகவயமாதலுக்கு முன்னர் உள்ளம் பிளவுபடுகிறது. சமூக நியதிகள் அதில் ஊடாடத் தொடங்கியதும் விருப்பங்கள் அனைத்தும் வெளிப்படுத்தவியலாத போது நனவிலியில்

தேக்கமாகிறது. இவ்வாறு தேங்கும் நினைவுகள் கனவுகளாக வெளிப்படுகின்றன. அதன் மூலம் விருப்ப நிறைவேற்றம் அடைவது ஒரு வழியாகவும் படைப்புகளின் வழி வெளிப்படுவது பிறிதொரு வழியாகவும் அமைகின்றன. கனவுகளில் பகற்கனவு, இரவுக் கனவு என இரண்டு வகையுண்டு. இதில் கதைகள் இரவுக் கனவாகவும், கவிதைகள் பகற் கனவாகவும் கொள்ளப்படுகின்றன. படைப்பு என்பது கனவின் ஒரு வகையே எனலாம்.

> **கனவுக்கு இணையான இலக்கிய ஆக்கங்களிலும் இடிபஸ் சிக்கல் வெளிப்படும் என்பதில் ஐயமில்லை. இடிபஸ் சிக்கல் போல குழந்தைப் பருவத்தில் வேறு பல பாலியல் சிக்கல்கள் உருவாகின்றன. காயடிப்புச் சிக்கல், குதச் சிக்கல், வாய்ச்சிக்கல், தன்மோகச் சிக்கல் எனப் பல உள்ளன. இவை ஒவ்வொன்றுக்கும் தனித்த உளப் பின்னணிகள் இருக்கின்றன. இவற்றுக்கெல்லாம் கனவும் இலக்கியமும் முதன்மை வடிகால்களாகின்றன (தி.கு.இரவிச்சந்திரன், 35 : 2019)**

என்ற கூற்று இதனை வெளிப்படுத்துகிறது, கனவும் படைப்பும் உளச்சிக்கல்களுக்கான வடிகால்களாக இருக்கின்றன. பெண்ணின் மனதில் தேக்கப்பட்ட உணர்ச்சிகள் சமூக நியதிகளால் கட்டுப்படுத்தப்பட்டு வெளிப்படுத்தவியலாமல் இருக்கின்றன. அவை படைப்புகளிலும், கனவுகளிலும் வெளிப்பட்டு நிறைவேற்றம் அடைகின்றன என இதனைக் கொள்ளலாம்.

**தமிழச்சி தங்கபாண்டியன் கவிதைகள்**

விருப்ப நிறைவேற்றம் அடையாத உணர்வுகளின் ஒரு பகுதி நனவிலில் தேங்குகின்றன. அவை படைப்புகளில் நனவு மன ஆதிக்கத்துடன் வெளிப்படுகின்றன. தமிழச்சி தங்கபாண்டியனின் கவிதைகளில் ஆணாதிக்க ஒழுங்குகளைக் களைத்துப் போடும் உணர்வுகள் வெளிப்படுவதைக் காணமுடிகிறது. பெண் வதைக்கப்படும் ஆணாதிக்கச் சமூகத்தில் அவளது ஒவ்வொரு அங்கமும் திமிறி எழும் ஆவேசம் கொள்வதை,

> **உலகின் மிக அழகிய பெண்**
> **இன்றைய தேதிக்கு நீதான் ஆயிஷா**
> **எங்கெல்லாம் ஒருபெண்**
> **அநீதியாக வதைக்கப்படுகிறாளோ**
> **அங்கெல்லாம் அறுபட்ட உன் மூக்கின் எச்சங்கள்**
> **நீதிக்கு முன்பாக சென்று முறையிடட்டும்**
> **முதன் முதலாக வாய்க்குப் பதில்**
> **மூக்கு புன்னகைப்பதை**
> **அவமானத்தின் ரணம் மிச்சமிருக்கும்**
> **உன் சீர்திருத்தப்பட்ட**
> **முகத்தில்தான் பார்த்தேன் (அருகன், 51)**

என்னும் கவிதை பாலியல் ஒடுக்கம் செய்யப்படுதல் என்னும் ஆணாதிக்க நடைமுறையினைப் பற்றி எழுதப்பட்டது. மூக்கறுத்தல் என்பது பெண்ணின் மீதான ஆழ்மன வெறுப்பின் அடையாளமாகும். உணர்வெழுச்சிக்குக் காரணமாக அமைவது பெண்ணின் அங்கங்கள் ஆகும். அதனை ஒறுத்தல் என்பது ஆழ்மன பகையின் வெளிப்பாடாகும். ஆணாதிக்கத்தின் வகை மாதிரிகளில் ஒன்றாக பெண்ணை தண்டித்தல் என்னும் செயல் காலங்காலமாக நடந்து வருகிறது. மூக்கு புன்னகைப்பது என்னும் சொற்களில் ஆணாதிக்க வல்லாதிக்கத்தை பகடி செய்யும் தன்மை காணப்படுகிறது. ஆணாதிக்கம் என்பது பெண்ணை ஒறுத்தலாகவே வெளிப்படும் பல்வேறு விதங்களில் அதன் வெளிப்பாடு அமையும். மூக்கினைக் காயப்படுத்தும் செயல்பாடு பழங்காலத்திலிருந்து மரபாகப் பின்பற்றப்பட்டு வருகிறது. மூக்கைக் காயப்படுத்துவதன் மூலமாக பாலியலைத் தடை செய்தல் நிகழ்கிறது. இராமாயணத்தில் இராமன் சூர்ப்பனகையின் மூக்கினை அறுத்து அவளைக் கோரமாக்குவது சுட்டப்படுகிறது. ஆண் தன் பாலிச்சையை மட்டுப்படுத்துவதற்கு பெண்ணை கட்டுப்படுத்தும் நிகழ்வுகளாக இவை அமைகின்றன. பாலிச்சையை தடை செய்வதன் மூலம் தனக்கான அதிகாரத்தை நிலைநாட்டிட ஆண்கள் விருப்பப்படுகின்றனர். பெண்ணைத் தண்டிக்கும் ஆணின் விருப்பம் நேரடியாகவும் மறைமுகமாகவும் வெளிப்படும். இங்கு நேரடியான பெண்ணைத் தண்டிக்கும் விருப்பம் வெளிப்படுகிறது. அதை பண்பாட்டின் பெயராலும் மரபின் ஒழுங்கை சிதையாமல் காத்தல் என்னும் பெயராலும் நிகழ்த்துகின்றனர் என்பதையே கவிதையில் வெளிப்படுத்துகிறார்.

**இனி ஒருபோதும் குற்றவுணர்வின்றி**
**என்னுடைய மூக்குத்திகளை**
**விதவிதமாக மற்ற முடியாது**
**செல்லமாக சின்ன மகளின்**
**மூக்கைத் திருக முடியாது**
**நாய்க்குட்டிகளுடன் மூக்குரசிக் கொஞ்ச முடியாது**
**நுனிமூக்கில் இருக்கின்ற கரும்புள்ளிகள்**
**குறித்துக் கவலைப்பட முடியாது (அருகன், 52)**

என்று சமூக வழக்ககங்களில் சிலவற்றைக் குறிப்பிடுகிறார். மூக்கு குறித்த இக் கவிதை வரிகள் அவரது ஆழ்மன விருப்பபங்களில் ஒன்றாக வெளிப்படுகிறது. மூக்குத்திகளால் மூக்கைக் காயப்படுத்திக் கொள்வது ஆணாதிக்கத்தின் ஒறுக்கும் செயல் ஆதலால் அதனைச் செய்யும் போதெல்லாம் தான் அடிமைப்படுத்தப்பட்ட நினைவுகள் மேலெழுந்து வருவதைத் தவிர்க்க முடியாது என்று குறிப்பிடுகிறார். குழந்தையின் மூக்கினை செல்லமாகக் கொஞ்சும் பேரில் திருகக் கூட முடியாது ஏனென்றால் அதுவும் ஆணாதிக்கத்தின் வழிநடத்தல் ஆகி விடும். நுனி மூக்கில் உள்ள கரும்புள்ளிகள் குறித்த கவலை இனி கொள்ள முடியாது என்பதும் அதே போன்று வெளிப்படக் கூடியதே. மூக்கு என்பது சுவாசித்தற்கு மட்டுமின்றி பாலிச்சைக்கான

அங்ககம் என்பதையும் அதனை ஒறுத்தல் மூலம் பாலிச்சையைத் தடை செய்தல் என்னும் ஆதிக்கக் குறியீட்டுப் பொருண்மையை வெளிப்படுத்துவதாக கவிதை அமைகிறது.

**எங்கள் சூர்ப்பனகையின் அறுபட்ட**
**முலையும் மூக்கும்**
**உன்னில் தொடரும் இத்துர்க்கனவை**
**இலக்குவணின் ஆண் திமிரை**
**அரேபிய தேசத்தின் அத்தனை வாசனை திரவியங்களும்**
**மறைக்க முடியாது தோற்றோடும் (அருகன், 52)**

என்னும் கவிதை வரிகள் சூர்ப்பனகை என்னும் தொன்மத்திலிருந்து ஆணாதிக்க வெறி தலைவிரித்தாடுவதைப் பற்றி எடுத்துரைக்கிறார். இங்கு மட்டுமின்றி உலகெங்கும் ஆணாதிக்காவதிகள் பெண்கள்மீது தாக்குதல் தொடுப்பதை தம் கடமையாகக் கொண்டுள்ளனர். ஆணாதிக்க வெறியே இவ்வாறான பெண்ணை காயப்படுத்துதல் என்பதில் ஈடுபட வைக்கிறது என்கிறார். ஆணாதிக்கத்தின் ஒழுங்குகள் பெண்களை மேலும் மேலும் கட்டுப்படுத்துகின்றன. ஒடுக்குகின்றன. வன்முறைக்கு உள்ளாக்குகின்றன.

ஆண் ஆதிக்கச் சமூகம் பற்றிய உணர்வானது சாத்தான், கடவுள் என்னும் இருமையின் எதிர்வுகளைக் கொண்டு கவிதையாக வெளிப்படுகிறது.

**இரவைத் தன்னிடமிருந்து எடுத்துச் சென்று விட்டான்**
**எனக் கடவுள் புகார் கொடுத்தவுடன்**
**பேசித் தீர்த்துக் கொள்ளச் சம்மதித்தான் சாத்தான்**
**பகலை விட இரவு எவ்விதத்தில்**
**கடவுளுக்குத் தேவை எனவும்**
**அதன் முக்கியத்துவம் குறித்துத்**
**தனக்குப் புரியும் விதத்தில் எடுத்துரைத்தால்**
**திருப்பித் தருவது பற்றியும்**
**யோசிக்கலாம் என்றான்**
**பகலின் சமூக மனிதனை**
**இரவு முற்றாக அம்மணமாக்கி**
**அவனை உருமாற்றுகிறதென்றும்**
**தனது அரவணைப்பும் கண்காணிப்பும்**
**அப்பொழுதுதான் அவனுக்கு அவசியமெனவும்**
**வாதித்தார் கடவுள் (அருகன், 58)**

இக்கவிதையானது இருள், பகல் என்னும் இருமைத் தன்மையிலான எதிர்வுகளைக் கொண்டு அமைந்துள்ளது. சாத்தான் என்பது தீமை, கடவுள் என்பது நன்மை என்ற அடிப்படையில் பகல் என்பது நன்மை, இரவு என்பது தீமை என அமைகிறது. பகலில் நனவு மனம் இயங்கத்

தொடங்குகிறது. அப்போது நனவிலியின் அடக்கப்படுகின்ற உணர்வுகள் மிகுதியாக இருக்கின்றன. இரவு என்பது நனவிலியில் அடக்கப்படுகின்ற உணர்வுகள் குறைவாக இருக்கின்றன. அதற்குக் காரணம் இரவில் மனிதன் நிர்வாணமாகின்றான். நிர்வாணம் என்பது மறைத்தற்கு ஏதுமற்ற நிலை ஆகும். இரவினைத் திருடிச் சென்ற சாத்தான் என்பது மனிதனின் சுதந்திரத்தைத் திருடிச் செல்லுதல் ஆகும். இது போல பிறிதொரு பொருளும் இரவு, பகல் என்பனவற்றுக்கு உண்டு. பகல் என்பது ஆண்கள் வெளியில் சென்று பொருளீட்டவும், இரவில் பெண்ணை அடக்கி ஆளவுமான நிகழ்வுகளுக்கு அடிப்படையாக அமைகிறது. சாத்தான் பெண்ணை தன் வயப்படுத்தியது என்பதால் இரவைத் திருடிச் செல்கிறது எனக் கவிதை அமைகிறது. பெண் இரவில் ஆணாதிக்கவாதிகளால் பாலியல் மற்றும் இதர செயல்பாடுகளால் ஒடுக்கப்படுகிறாள். எனவே அவளுக்கு சுதந்திரமளித்தல் என்னும் செயல்பாடே இரவை ஒழித்து வைத்தல் ஆகும். இரவே இல்லாது போனால் பெண் சுதந்திரமானவளாக இருப்பாள் என கவிதை அமைகிறது. பகலின் மனிதன் இரவில் நிர்வாணமாகிறான் எனவும் அப்பொழுதுதான் கடுமையான தவறுகளை அவன் செய்பதற்கான சூழல் அமைகிறது எனவே அவனைக் கண்காணிக்கவும், நல்வழிப்படுத்தவும் தன் உதவி தேவை என்பதாகக் கூறுவதைக் காணமுடிகிறது. கடவுள் துணை என்பது மனிதனை அச்சுறுத்தி நல்வழிப்படுத்துதல் ஆகும். இரவும் இல்லாது போனால் மனிதன் தன்னிலை மறந்து வேறு வகையான மன அழுத்தத்திற்கு ஆளாக நேரிடும் எனவே இரவைத் திருடிச் செல்ல சாத்தான் முற்பட்டதாகக் கூறப்படுகிறது. சாத்தானின் செயல்பாடு இங்கு பெண்ணின் செயல்பாடாக அமைகிறது. கடவுளின் செயல்பாடு ஆணாதிக்கக் கருத்தியல்களால் சமூகத்தின் நியதிகள் உருவாக்கப்பட்டமையாக வெளிப்படுகிறது. இவ்வாறு கவிதைகளில் நனவிலியின் ஆதிக்கம் மிகுதியாக இருப்பதை தமிழச்சி தங்கப்பாண்டியனின் மன உணர்வுகள் வெளிப்படுவதாகக் கொள்ளலாம். பெண் ஆளுமைகளின் பதிவுகளில் அவர்களது நனவிலி மனமே செயல்கின்றன. கவிதைகளின் இயல்பானது விருப்ப நிறைவேற்றத்திற்கு உதவுதல் ஆகும். அந்த வகையில் இக்கவிதைகள் அவரது மனஉணர்வினை வெளிப்படுத்துகின்றன. ஆணாதிக்கச் சமூக மனப்பான்மையின் கொடுங்கோன்மையை எடுத்துரைப்பமதாக அமைகின்றன.

**முடிவுரை**

மனித நடத்தைகளை ஆராயும் துறையே உளவியல் ஆகும். மனித மனம் சிறு குழந்தையாக இருக்கும் போதே பிளவுக்கு உள்ளாகிறது. பிளவுற்ற மனதின் தளங்கள் மூன்றாக அமைகின்றன. ஒவ்வொரு மனதின் தன்மையும் குறிப்பிட்ட சூழல்களால் பாதிக்கப்பட்டு இருப்பது இயல்பாகும். சமூக நியதிகள் மனித மனத்தின் நனவிலியில் தேங்குகின்றன. அவ்வாறு தேக்கமுறும் நினைவுகள் கனவுகளாகவும் படைப்புகளாகவும் வெளிப்படுகின்றன. நனவிலி ஏக்கங்கள் நனவடங்கு மனத்தில் பதிவு பெறுகின்றன. அவையே பின்னர் படைப்புகளில் வெளிப்படுகின்றன. இட், ஈகோ, சூப்பர் ஈகோ என்னும் மூன்று நிலைகளில் மனமானது கட்டமைகிறது. விருப்ப மனம், நெறி மனம் என்பது இவற்றுள் இயங்குகின்றன.

ஒவ்வொரு மனத்தின் செயல்பாடும் ஒன்றினோடு தொடர்புடைதாக அமைகிறது. ஈகோ, சூப்பர் ஈகோ என்பன மனித நடத்தைகள் ஒவ்வொன்றிலும் தொடர்புடைதாக அமைகிறது. ஆனால் இட் என்பது பண்பாட்டு செயல்பாடுகளால் அமுக்கத்திற்கு உள்ளாகும் நினைவுகளைக் கொண்டுள்ளன. பெண்ணியம் என்பது ஆணாதிக்கச்சமூகத்தின் அனைத்து தளைகளிலிருந்துத் தம்மை விடுவித்துக் கொள்வதற்காக உருவான ஒரு கருத்தியல் ஆகும். இக்கருத்தியல் அடிப்படையில் பெண்ணின் பல்வெறு விடுதலைச் சிந்தனைகள் உருவாக்கம் பெற்றுள்ளன. பெண்களின் படைப்புகளில் அமுக்கத்திற்கு உள்ளான பல சிந்தனைகள் காணப்படுகின்றன.

ஆண்களின் புறச்செயல்பாடுகளால் பாதிப்புற்ற பெண்ணின் நனவிலியானது அதனை கனவாகவும் படைப்பாகவும் நிறைவேற்றிக் கொள்கிறது. பெண் எழுத்தாளர்களின் கவிதைகளில் அவர்தம் உள்மன எண்ணங்கள் குறியீடுகளாக வெளிப்படுகின்றன. தமிழச்சி தங்கப்பாண்டியனின் கவிதைகளில் இத்தகைய கருத்துக்கள் காணப்படுகின்றன. ஆணாதிக்கத் தன்மையிலான பல்வேறு செயல்பாடுகளைக் குறித்து தம் கவிதைகளில் எழுதியுள்ளார். ஒவ்வொரு கவிதையிலும் ஆண்மைய சமூக செயல்பாடுகள் விமர்சிக்கப்படுகின்றன. அநீதியான செயல்பாடுகள் கண்டிக்கப்படுகின்றன. மூக்கறுத்தல், கடவுள், சாத்தான் என்னும் இருமை போன்றவற்றைப் பற்றிய கவிதைகளில் ஆணாதிக்கத் தன்மையிலான கருத்துக்கள் வெளிப்படுகின்றன.

**துணைநூற்பட்டியல்**

[1] இரவிச்சந்திரன் தி. கு. *சிக்மண்ட் பிராய்ட் உளப்பகுப்பாய்வு அறிவியல்.* அலைகள், கோடம்பாக்கம், சென்னை, 2011

[2] இரவிச்சந்திரன். தி. கு. *காப்பிய உளப்பகுப்பாய்வு.* பிறழ் வெளியீடு, மதுரை, 2019.

[3] காஞ்சனா. இரா. *பெண்ணிய உளப்பகுப்பாய்வும் பெண்மொழியும்.* செல்லப்பா பதிப்பகம், தானப்ப முதலி தெரு, மதுரை, 2013

[4] சாரதாம்பாள். செ. *இலக்கியமும் உளப்பகுப்பாய்வும்.* ஹரிஹரன் பதிப்பகம், மதுரை, 2004.

[5] சாரதாம்பாள். செ. *ஒப்பிலக்கியக் கோட்பாடுகளும் பிறதுறை ஒப்பீடுகளும்.* மீனாட்சி புத்தகநிலையம், தானப்ப முதலி தெரு, மதுரை, 2021.

[6] தமிழச்சி தங்கப்பாண்டியன். *அருகன்.* உயிர்மை பதிப்பகம், அபிராமபுரம், சென்னை, 2011.

**நிதிசார் கட்டுரையாளர் உறுதிமொழி:** இல்லை.

**கட்டுரையாளர் நன்றியுரை:** இல்லை.

**கட்டுரையாளர் உறுதிமொழி:** இக்கட்டுரையில் எவ்வித முரண்பாடும் இல்லை.

இக்கட்டுரை கிரியேட்டிவ் காமன்சு ஆட்ரிபியூசன் 4.0வின் https://creativecommons.org/licenses/by/4.0/ *கீழ்* பன்னாட்டு உரிமம் பெற்றுள்ளது.